**தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலையாக இருக்கும்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் மூன்றாவது முன் கூட்டிய மதிப்பீட்டின் படி, 2021- 2022 ஆம் ஆண்டு இந்தியாவில், தோட்டப்பயிர்களின் பரப்பில் தென்னை சாகுபடி சுமார் 51 சதவீதமாகும். நம் நாட்டில், தேங்காய் 21.59 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 132.83 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகியவை சேர்த்து மொத்த தேங்காய் உற்பத்தியில் 90 சதவீதம் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டில், 2021-22 ஆண்டில் தேங்காய் 4.46 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 35.07 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தேங்காய் அதிகளவு பயிரிடப்படுகின்றது.

வர்த்தக மூலகங்களின் படி, பருவ மழையால் தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ளது. தற்போது, பெருந்துறை சந்தைக்கு கிருஷ்ணகிரி, தர்மபுரி, பொள்ளாச்சி, சேலம், பல்லடம் மற்றும் காங்கயம் ஆகிய பகுதிகளிலிருந்து வருகிறது. நேரடி கொள்முதல் திட்டத்தின் கீழ், இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (NAFED)

கிட்டத்தட்ட 40,600 டன் கொப்பரையை தமிழ்நாட்டிலிருந்தும், 255.55 டன் கேரளாவிலிருந்தும் 2022 ஆம் ஆண்டில் வாங்கியுள்ளது.

விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு மையத்திலும் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், மார்ச்-ஏப்ரல்'2023 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.12 முதல் 14 வரை இருக்கும் மற்றும் தரமான கொப்பரையின் பண்ணை விலை ரூ.75 முதல் ரூ.80 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405

2. இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
   தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்
   நீர் தொழில்நுட்ப மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278


**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசியார் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-6611284

## Coconut and Copra Prices may remain static

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for coconut and copra.

Coconut is the major plantation crop occupying nearly 51 per cent of total area under plantation in India. According to the Third Advance Estimates of the Ministry of Agriculture and Farmers Welfare (2021-22), the area under coconut is 21.59 lakhs hectare with a production of 132.83 lakh tonnes. Karnataka, Tamil Nadu, Kerala and Andhra Pradesh together contribute nearly 90 per cent of the total coconut production in India.

Tamil Nadu state produced 35.07 lakh tonnes of coconuts from the cultivable area of 4.46 lakh hectares in 2021-22. The major coconut growing districts are Coimbatore, Tiruppur, Thanjavur, Dindigul and Kanyakumari.

According to the trade source, current arrivals from Tamil Nadu have already started and periodical rains had boosted the production of nuts. At present, arrivals of copra to Perundurai market are from Krishnagiri, Dharmapuri, Pollachi, Palladam, Salem and Kangayam. Under the procurement scheme, National Agricultural Cooperative Marketing Federation of India (NAFED) has already purchased nearly 40,600 tonnes of milling copra from Tamil Nadu and 255.55 tonnes from Kerala during 2022.

The price forecasting team has analyzed the past 15 years prices for coconut and copra that prevailed at Avalpoonthurai Regulated Market of Erode district and Perundurai Cooperative Marketing Society. As per the results of the analysis, the farmgate price of good quality coconut during March-April, 2023 will be Rs. 12-14 per nut. Price of good quality copra will

rule around Rs. 75-80 per kg. The price may subject to change based on the arrivals from other states. Hence, farmers are advised to take selling decision accordingly.

***For Marketing information details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Spices & Plantation Crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611284*